**செய்தி (ம) மக்கள், சென்னை–9 விளம்பரம்**

**சிறுபான்மையினர் நல இயக்ககம்**
**கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை–600 005**
**தொலைபேசி: 044-28520033**

**கிறித்தவர்கள் *ஜெருசலேம்* பயணம் மேற்கொள்வதற்கு தமிழக அரசின் நிதி உதவி வழங்கும் திட்டம் 2019–20**

தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறித்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்காக தமிழக அரசால் நபர் ஒருவருக்கு ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் கிறித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் அனைத்து பிரிவினர்களை உள்ளடக்கிய 600 கிறித்தவர்கள் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும். இவற்றில் 50 கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகள் புனித பயணம் செல்லலாம்.

இப்புனித பயணம் இஸ்ரேல், எகிப்து மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளில் உள்ள **பெத்லஹேம், ஜெருசலேம், நாசரேத், ஜோர்டான் நதி, கலிலேயா சமுத்திரம் மற்றும் கிறித்தவ மத தொடர்புடைய பிற புனித தலங்களையும் உள்ளடக்கியது.** இப்புனித பயணம் அக்டோபர் 2019 முதல் மார்ச் 2020 வரை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயணக்காலம் 10 நாட்கள் வரை இருக்கும்.

இதற்கான விண்ணப்பப்படிவம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். தவிர, **www.bcmbcmw.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பப்படிவத்தை படியிறக்கம் செய்தும் பயன்படுத்தலாம். இத்திட்டத்திற்கான நிபந்தனைகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அனைத்தும் உரிய இணைப்புகளுடன் அஞ்சல் உறையில் ***“கிறித்தவர்களின் ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி கோரும் விண்ணப்பம் 2019–20”*** என்று குறிப்பிட்டு **ஆணையர், சிறுபான்மையினர் நல இயக்ககம், கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை–600 005** என்ற முகவரிக்கு **30.8.2019–க்குள்** கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். (நேரில் வரவேண்டியதில்லை).

**சிறுபான்மையினர் நல ஆணையர்**

# சிறுபான்மையினர் நல இயக்ககம்
## ஜெருசலேம் புனித பயணம் திட்டம் 2019–20
### ஜெருசலேம் புனித பயணம் செல்வதற்கு நிதி உதவி கோரும் விண்ணப்பம்

புகைப்படம்
(சுய கையொப்பமிடுதல் வேண்டும்)

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. தந்தை/தாய் /கணவர் /
 பாதுகாவலர் பெயர் :
3. பிறந்த தேதி மற்றும் வயது
 (ம) பாலினம் :
4. அ. திருமணம் ஆனவரா : ஆம் / இல்லை
 ஆ. கன்னியாஸ்திரி / அருட்சகோதரி : ஆம் / இல்லை
5. த;றபோதைய இருப்பிட முகவரி

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ........................

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .மாவ;டடம் . .. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

அஞ்சல் குறியீட்டு எண் . .. . . . . .. . . . . …. . . . . . . . . இமெயில் முகவரி

6, தொலைபேசி (ம) அலைபேசி எண்.

7. விண்ணப்பதாரா் கிறித்தவர், கன்னியாஸ்திரி / அருட்சகோதரி
என்பதற்கான சான்று இணைத்தல் வேண்டும் ( √ ) செய்யவும்

| கல்வி நிலைய மாற்றுச் சான்றிதழ் ((TC) | திருமுழுக்கு சான்றிதழ் (Baptism Certificate) | வட்டாட்சியர் சான்றிதழ் (Tahsildar Certificate) | கன்னியாஸ்திரி / அருட்சகோதரி |
|---|---|---|---|
| | | | |

8. விண்ணப்பதாரருடன் சேர்த்து பயணம் மேற்கொள்ளும் குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள்
 (அதிகபட்சம் 4 நபர்கள். இதில் 2 வயதிற்கு மேற்பட்ட இரு குழந்தைகளும் இருக்கலாம் )

| வ. எண் | பெயர் | பிறந்த தேதி | வயது (31.7.19 முடிய) | குடும்ப உறவு முறை | திருமணம் ஆனவரா? ஆம் / இல்லை | ஆதார் அட்டை எண். |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |

9. வயது 70 நிறைவடைந்த விண்ணப்பதாரருடன் பயணம் மேற்கொள்ளும் பாதுகாவலரின்விவரம்

| **பெயர்** | **பிறந்த தேதி** | **வயது (31.7.19 முடிய)** | **உறவு முறை** | **திருமணம் ஆனவரா** | **இருப்பிட முகவரி (ம) ஆதார் எண்.** |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**10.** விண்ணப்பதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் : ரூ.
(இப்பயணத்திற்கு வருமான உச்சவரம்பு கிடையாது)

**11.** பாஸ்போர்ட் விவரம் (விண்ணப்பதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள்/பாதுகாவலர்)

| வ. எ ண் | பெயர் | பாஸ்போர்ட் எண் | பாஸ்போர்ட் வழங்கிய அலுவலகம் | பாஸ்போர்ட் செல்லதக்க காலம் (Date of Validity) |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

**12.** (அ) இதற்கு முன் ஜெருசலேம் சென்ற முன்அனுபவம் உள்ளதா ? : ஆம் / இல்லை
(ஆ).ஆம் எனில் பயணம் செய்த ஆண்டு(ஆதாரம் ஏதுமிருப்பின் இணைக்கலாம்)

**13.** வெளிநாடு பயணம் மேற்கொள்ளுவதற்கு தகுதியுடையவர் என்பதற்கான : ஆம் / இல்லை
மருத்துவ மற்றும் உடற் தகுதி சான்றிதழ்( பதிவு பெற்ற மருத்துவ அலுவலரிடமிருந்து பெற வேண்டும்

**14.** விண்ணப்பதாரர் பயணம் மேற்கொள்ள விரும்பும் மாதம் ( √ ) செய்யவும் )

| அக்டோபர் **2019** | நவம்பர் **2019** | டிசம்பர் **2019** | ஜனவரி **2020** | பிப்ரவரி **2020** | மார்ச் **2020** | குறிப்பிடும் மாதங்களில் எதுவாயினும் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

இடம்: விண்ணப்பதாரரின் கையொப்பம்
நாள் :

# உறுதிமொழி

நான், . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மை என உறுதியளிக்கிறேன். நான் வெளிநாடு பயணம் மேற்கொள்வதற்கு எவ்வித வில்லங்கங்களும் (Encumbrances) இல்லை என உறுதி அளிக்கிறேன்.

2. இப்புனித பயணத்தில் ஏற்படும் மொத்த செலவினங்களில் அரசு வழங்கும் நிதி ரூ.20000/–(ரூபாய் இருபதாயிரம் மட்டும்) போக மீதமுள்ள தொகையை நிபந்தனைகளின்படி செலுத்துவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

3. நான் புனிதப் பயணத்திற்காக மட்டுமே விண்ணப்பம் செய்கிறேன். நான் பயணம் செய்யும் நாடுகளில் சட்டவிரோதமான செயல்களிலோ அல்லது வேலை பெற முயற்சிக்கவோ / பயண நிரலில் இருந்து விலகி அத்துமீறி தங்கவோ முயற்சிக்க மாட்டேன். அவ்வாறு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டால் என்மீது மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என சம்மதம் தெரிவிக்கிறேன்.

4. இப்புனித பயணம் குறித்த எனது அனுபவத்தினை பயணமுகவரிடம் தவறாது சமர்ப்பிக்கிறேன் என உறுதி அளிக்கிறேன்.

இடம் :
நாள் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்
மற்றும்
குடும்பத்தாரின் கையொப்பம்

| வ.எண் | கையொப்பம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

<u>**இணைப்புகள்**</u>

**(விண்ணப்பதாரர், குடும்ப உறுப்பினர்கள்/பாதுகாவலர் அனைவருக்கும் சமர்ப்பிக்கவேண்டும்)**

i) பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் – விண்ணப்பதாரர் (விண்ணப்பத்தில் ஒன்று + 2) இரண்டு – குடும்ப உறுப்பினர்களுக்கு – இரண்டு புகைப்படங்கள்

ii) கிறித்தவ சமயத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழ் (கலம் 7இல் குறிப்பிட்டுள்ளவாறு)

iii) பாஸ்போர்ட் நகல்

iv) இருப்பிட சான்றிதழ்: குடும்ப அட்டை,/பாஸ்போர்ட்/ஓட்டுநர் உரிமம்/வாக்காளர் அட்டை/வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை/அரசால் ஏற்றுக்கொள்ள தக்க இதர ஆவணங்கள் இவற்றில் ஏதேனும் ஒன்று

v) பதிவுபெற்ற மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட வெளிநாடு பயணம் மேற்கொள்வதற்கான மருத்துவ மற்றும் உடற்தகுதி சான்றிதழ்

vi) சுய முகவரியிட்ட ரூ.5/– மதிப்புள்ள அஞ்சல்வில்லையுடன் கூடிய உறை ஒன்று (விண்ணப்பதாரருக்கு மட்டும்)

vii) ஆதார் அட்டை நகல்கள்

**************

## ***<u>கிறித்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்கான நிபந்தனைகள் 2019–20</u>***

- கிறித்தவர்கள் ஜெருசலேம் பயணம் மேற்கொள்வதற்கு நபர் ஒருவருக்கு அரசு நிதி உதவித் தொகை **ரூ.20,000/–** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் அனைத்து பிரிவினர்களை உள்ளடக்கிய 600 கிறித்தவர்கள் இதில் 50 கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகள் புனித பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

- இப்புனித பயணம் அக்டோபர் 2019ம் மாதத்தில் தொடங்கி மார்ச் 2020 வரை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்/குடும்பத்தினர்/பாதுகாவலர் தமிழ்நாட்டில் வசிக்கும் கிறித்தவ மதத்தவராக இருத்தல் வேண்டும். இதற்கு ஆதாரமாக கல்வி நிறுவனம் வழங்கியுள்ள மாற்றுச் சான்றிதழ் **(Transfer Certificate)**/ திருமுழுக்கு சான்றிதழ் **(Baptism Certificate)** / வட்டாட்சியர் சான்றிதழ் **(Tahsildar Certificate)** இவற்றில் ஏதேனும் ஒன்று சமர்ப்பிக்கவேண்டும்

- 01.09.2019 தேதியிலிருந்து குறைந்தபட்சம் ஓராண்டு செல்லதக்க **(One year validity)** பாஸ்போர்ட் உடையவராக இருத்தல்வேண்டும். விண்ணப்பிக்கும்போது வெளிநாடு பயணம் மேற்கொள்ளுவதற்கு எவ்விதமான வில்லங்கங்களும் **(Encumbrances)** இருத்தல் கூடாது

- வெளிநாடுகளில் பயணம் மேற்கொள்வதற்கு மருத்துவ மற்றும் உடற்தகுதி ( **Medical & Physical Fitness**) பெற்றவராக இருத்தல் வேண்டும். இதற்கான சான்றிதழ் பதிவுபெற்ற மருத்துவரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

- இப்பயணம் மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவினத்தில் அரசு வழங்கும் நிதி உதவி ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) நீங்கலாக மீதமுள்ள தொகை விண்ணப்பதாரரால் செலுத்தப்படவேண்டும். இதற்கான உறுதிமொழியை கையொப்பமிட்டு விண்ணப்பத்துடன் தவறாது சமர்ப்பிக்கவேண்டும். இந்த நிதி உதவி ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) பயணம் முடிந்து திரும்பிய பின் பயண முகவருக்கு அளிக்கப்படும்.

- ஒரு குடும்பத்தில் விண்ணப்பதாரரையும் சேர்த்து அதிகபட்சம் 4 நபர்கள் பயணம் மேற்கொள்ளலாம். இதில் 2 வயது நிறைவடைந்த 2 குழந்தைகளும் இருக்கலாம். 70 வயது நிறைவடைந்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் அவருக்கு துணையாக அவர் விரும்பும் ஒரு நபரை மேற்படி நிபந்தனைகளுக்குட்படும்பட்சத்தில் அவருடன் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

- கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளிடமிருந்து பெறப்படும் தகுதியுள்ள விண்ணப்பம் முன்னுரிமை அளிக்கப்படும்.

- இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஜெருசேலம் புனிதப்பயணம் மேற்கொண்டவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க கூடாது.

- பயனாளிகள் மாவட்ட வாரியாக கிறித்தவ மக்கட்தொகையின் அடிப்படையில் கணிணி மூலம் குலுக்கல் **(LOT Systems)** முறையில் தெரிவு செய்யப்பட்டு தகவல் தெரிவிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயண முகவர்கள் மூலம் மட்டுமே இப்புனித பயணத்தினை மேற்கொள்ளவேண்டும்.

- பயணக்காலம் **10 நாட்கள்** வரை இருக்கும். இப்பயணம் சென்னையில் துவங்கி சென்னையில் முடியும். இப்பயணத்திற்கான காலம் மற்றும் பயண நிரல் ஜெருசலேம் புனித பயணக்குழுவால் முடிவு செய்யப்படும்.

- இப்புனித பயணம் **பெத்லஹேம், ஜெருசலேம், நாசரேத், ஜோர்டான் நதி, கலிலேயா சமுத்திரம் மற்றும் கிறித்துவ மத தொடர்புடைய பிற புனித தலங்களையும் உள்ளடக்கியது.** வெளிநாட்டு பிரச்சினைகள் நிகழுமாயின் பாதுகாப்பு கருதி சில இடங்கள் பயணிப்பது நிறுத்த நேரிடும்.

- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தகவல் மற்றும் புனிதப்பயணம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் விவரம் பயண முகவரால் தெரிவிக்கப்படும். பயணம் மேற்கொள்ளும் காலத்தினை நிர்ணயிப்பதில் நிர்வாகத்தின் முடிவு இறுதியானது.

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் தேவையான அனைத்து இணைப்புகளுடன் அஞ்சல் உறையில் "***"கிறித்தவர்களின் ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி கோரும் விண்ணப்பம் 2019–20*** " என்று குறிப்பிட்டு 30.08.2019 வெள்ளிக்கிழமை **மாலை 5.45 மணிக்குள்** கீழ்க்காணும் முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும்.

**ஆணையர்,**
**சிறுபான்மையினர் நல இயக்ககம்,**
**கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம்,**
**சென்னை–600 005**

**************